சுருக்கம்

2008-2009 ஆண்டிற்கான அறிவிப்புகள் - அறிவிப்பு எண். 20 - நகராட்சிகளில் தொடங்கப்பட்டு கட்டப்பட்டு வரும் பேருந்து நிலையங்கள் மற்றும் அலுவலக கட்டிடங்களுக்கு பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா நினைவாக "பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா பேருந்து நிலையம்/ பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா அலுவலகக் கட்டிடம்" என பெயரிடுதல் – 15.9.2008 முதல் ஒரு ஆண்டு காலத்தினை பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழாவாக கொண்டாட சில நிகழ்ச்சிகள் மற்றும் நடவடிக்கைகள் – ஆணை வெளியிடப்படுகிறது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(நநி5) துறை

அரசு ஆணை (டி) எண். 395 நாள் 16.9.2008

திருவள்ளுவர் ஆண்டு 2039 ஆவணி 31

படிக்கப்பட்டது

1. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானிய கோரிக்கை எண்.34 அறிவிப்புகள் 2008-2009 வரிசை எண்.20,

படிக்க

2. நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் 26749/2008/எம்.1 நாள் 26.6.2008.
3. அரசு ஆணை (டி)எண்.562 தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை நாள் 29.8.2008.

----

ஆணை:

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மானிய கோரிக்கை எண். 34-யை சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்தபோது அறிவிப்பு எண்.20-ல் கீழ்க்கண்டவாறு அறிவிப்பினை செய்துள்ளார்கள்.

> "கடந்த இரண்டு ஆண்டுகளில் நகராட்சிகளின் பல்வேறு கட்டுமான பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இப்பணிகளில் இந்த ஆண்டு முடிவடையும் மற்றும் தொடங்கப்படவுள்ள பேருந்து நிலைய கட்டடங்களுக்கும் நகராட்சி அலுவலக கட்டடங்களுக்கும் பேரறிஞர் நூற்றாண்டு விழா நினைவாக, "பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா பேருந்து நிலையம்/ பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா அலுவலகக் கட்டிடம் என்று பெயரிடப்படும்."

2. நகராட்சி நிர்வாக ஆணையர் தனது அறிக்கையில், மாண்புமிகு அமைச்சர் அறிவிப்பில் தெரிவித்துள்ளவாறு இரண்டு ஆண்டுகளில் நகராட்சிகளின் பல்வேறு கட்டுமானப் பணிகள் முடிவடையும் மற்றும் தொடங்கப்படவுள்ள பேருந்து நிலைய கட்டடங்களுக்கும் நகராட்சி அலுவலகக் கட்டடங்களுக்கும் பேரறிஞர் நூற்றாண்டு விழா நினைவாக பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா பேருந்து நிலையம்/ பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா அலுவலகக் கட்டிடம் என்று பெயரிடுவதற்காக உரிய ஆணை வழங்குமாறு இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

3. நகராட்சி ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆராய்ந்து நகராட்சிகளில் இந்த ஆண்டு முடிவடையும் மற்றும் தொடங்கப்படவுள்ள பேருந்து நிலைய கட்டடங்களுக்கும் நகராட்சி அலுவலக கட்டடங்களுக்கும் பேரறிஞர் நூற்றாண்டு விழா நினைவாக "பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா பேருந்து நிலையம்/ பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா அலுவலகக் கட்டிடம்" என்று பெயரிடப்பட வேண்டும் என அரசு ஆணையிடுகிறது.

4. மேலும் 2008-2009ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட அறிக்கையை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தாக்கல் செய்து "2009ஆம் ஆண்டு முழுமைக்கும் அண்ணாவின் நூற்றாண்டாக தமிழகமெங்கும் சிறப்பாக கொண்டாடப்படும்" என அறிவித்ததினால் மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் அதன் நிகழ்ச்சிகள்/ திட்டங்கள் விரிவாக குறிப்பிட்டுள்ளது. அதன் அடிப்படையில் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தினை கொண்டாட தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மேற்கொள்ள வேண்டும் எனவும் அரசு மேலும் ஆணையிடுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

கே. தீனபந்து,
அரசு முதன்மை செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 600 005.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்,
(நகராட்சி நிர்வாக ஆணையர் மூலமாக)
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அனைத்து பிரிவுகள்.
இருப்பு கோப்பு/ உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர். 16/9/08

16/9/08